**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**நோன்புப் பெருநாள் பிரசங்கம்**
**01 ஷவ்வால் 1445 ஹிஜிரி**

# மார்க்க வாழ்க்கை, திடநம்பிக்கை மற்றும் சகிப்புத்தன்மையை ஏற்படுத்துதல்

**اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ**

**اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَر**

**اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَر**

**اللهُ أَكْبَرُ كُلَّمَا صَلَّى الْمُصَلِّي وَكَبَّرَ**

**اللهُ أَكْبَرُ كُلَّمَا صَامَ الصَّائِمُ وَأَفْطَرَ**

**اللهُ أَكْبَرُ كُلَّمَا أَنْعَمَ عَلَى الْمُنْعِمِ فَشَكَرَ**

**اللهُ أَكْبَرُ كُلَّمَا ابْتَلَى الْمُبْتَلَى فَصَبَرَ**

**لاَ إِلَهَ إِلَّا اللهُ وَاللهُ أَكْبَرُ**

**اللهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ**

**الحَمْدُ للهِ الَّذِي تَفَضَّلَ عَلَيْنَا بِكَرَمِهِ وَإِحْسَانِهِ،وَرَزَقَنَا الصَّبْرَ وَالِاحْتِسَابَ بِقَدَرِهِ وَقَضَاءِهِ، وَحَفِظَنَا مِنْ جَهْدِ البَلَاءِ وَسُوءِ قَضَاءِهِ، وَحَبَّبَ إِلَيْنَا الإِحْسَانَ إِلَى خَلْقِهِ وَعِيَالِهِ، فَلِلَّهِ الحَمْدُ رَبِّ السَّمَوَاتِ وَرَبِّالأَرْضِ رَبِّ العَالَمِينَ، وَلهُ الكِبْرِيَاءُ فِي السَّمَوَاتِ وَالْأَرْضِ وَهُوَ العَزِيزُ**

الحَكِيمُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ ذُو الْعَرْشِ الْكَرِيمِ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، ذُوْ اْلخُلُقِ الْعَظِيْمِ، عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِينَ رَؤُوفٌ رَحِيمٌ. اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ اْلغُرِّ اْلمَيَامِيْنِ. نَشْهدُ أَنَّهُ قَدْ أَدَّى اْلأَمَانَةَ، وَبَلَّغَ الرِّسَالَةَ، وَنَصَحَ اْلأُمَّةَ، وَجَاهَدَ فِي اللَّهِ حَقَّ جِهَادِهِ حَتَّى أَتَاهُ اليَقِينُ. أَمَّا بَعْدُ، فَيَا أَيُّهَا الْمُسْلِمُوْنَ، أُوْصِيْكُمْ وَنَفْسِيْ بِتَقْوَى اللَّهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

மகிழ்ச்சிக்குரிய இக்காலைப் பொழுதில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மகத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில், தக்பீரை சப்தமாகச் சொல்வோமாக! அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் அவனது மகிமையையும் கம்பீரத்தையும் நினைத்து புகழ்வோமாக! அல்லாஹ், எல்லாக் காலங்களிலும் புகழப்படுவதற்கும் நன்றி செலுத்தப்படுவதற்கும் நிச்சயமாக மிகவும் தகுதியானவன்; அல்லாஹ், நம்மீது பொழிந்துள்ள அருட்கொடைகளும் உதவிகளும் எண்ணற்றவையாகும். அதில் ஒன்று, புனிதமிக்க ரமதான் மாதத்தில் அவனை வணங்கி, வழிபடும் ஆற்றலை அவன் நமக்கு வழங்கியதாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَلِتُكْمِلُواْ ٱلْعِدَّةَ وَلِتُكَبِّرُواْ ٱللَّهَ عَلَىٰ مَا هَدَىٰكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ

பொருள்: அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை. குறிப்பிட்ட நாட்களை நீங்கள் பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி, நன்றி

செலுத்துவதற்காகவுமே [அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்]. [அத்தியாயம்: அல்-பகரா, வசனம்: 185].

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ .

**அன்பிற்குரிய எனது சகோதர, சகோதரிகளே!**

காலங்கள் மிகவும் வேகமாகக் கடந்து செல்கின்றன. இதற்கு முன்பு புனிதமிக்க ரமதான் மாதத்தின் வருகையை நாம் ஆவலுடன் எதிர்பார்த்தோம். இப்போது, அது நம்மை விட்டும் கடந்து சென்று விட்டது. எவர்கள் ரமதான் மாதத்தின் நறுமணத்தை வெற்றிகரமாக நுகர்ந்தார்களோ, அதன் வெகுமதிகளை அறுவடை செய்தார்களோ, அதன் மூலம் பயனடைந்தார்களோ அவர்கள் பெரும் பாக்கியசாலிகள் ஆவார்கள்.

ரமதானாகிறது, நமது வாழ்க்கையில் கருணைச் சிந்தனையின் மதிப்பு என்ன என்பதை நமக்குப் போதித்துள்ளது. நன்மை மற்றும் நற்காரியத்தின் உணர்வை நம்மில் வளர்த்து, ஞானத்தின் உயிரோட்டத்தையும் நம்மில் ஏற்படுத்தியுள்ளது. நம்பிக்கையும் சகிப்புத் தன்மையுமிக்க, சிறந்த, உறுதியான சமுதாயத்தை உருவாக்குவதற்கான நமது முயற்சிகளுக்கு அது புத்துயிர் அளித்துள்ளது.

இப்படிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது, குறிப்பாக, சவால்களும், சண்டை, சச்சரவுகளும் பிரிவினைகளும் அமைதியின்மையும் அதிகரித்துள்ள இக்காலத்தில் மிகவும் அவசியமாகும். மேலும், இப்படிப்பட்ட எதிர்மறையான நிலைகள், பக்திமிக்க, நம்பிக்கையுள்ள, கல்வியறிவுமிக்க சமுதாயத்தை ஒருபோதும் பலஹீனப்படுத்தி விடாது. மாறாக, அவர்கள் தம்மையும் தமது சமுதாயத்தையும் முன்னேற்றிக் கொள்வதற்கான தமது அர்ப்பணிப்பில் மேற்கொண்டு உறுதியாக இருப்பார்கள். எந்த அளவு சவால்கள் பெரியவையாக உள்ளனவோ அந்த அளவு நம்மையும் நமது சமுதாயத்தையும் பலப்படுத்துவதற்கான நமது முயற்சிகளை நாம்

அதிகரித்துக் கொள்ள வேண்டும். இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

"உங்களின் நிலையை, இடத்தை நீங்கள் உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; மற்றவர்கள் நன்மை செய்தால் அதனை விடச் சிறப்பாக நன்மையைச் செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். எனினும், அவர்கள் தீங்கிழைத்தால், அநீதத்தின் மூலம் அதற்குப் பதிலளிக்க முயற்சிக்காதீர்கள்" [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்].

எனது சகோதர, சகோதரிகளே நினைவில் கொள்ளுங்கள்! நமது நிலையை முன்னேற்றிக் கொள்வதற்கு நாம் முயற்சிக்காமல், வெறும் கருத்துக்களைத் தெரிவிப்பவர்களாகவும் விமர்சிப்பவர்களாகவும் மட்டும் நாம் இருப்பது கூடாது. அல்லாஹ், திருக்குர்ஆனில் கூறுகிறான்:

إِنَّ ٱللَّهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتَّىٰ يُغَيِّرُوا۟ مَا بِأَنفُسِهِمْ ۗ وَإِذَآ أَرَادَ ٱللَّهُ بِقَوْمٍ سُوٓءًا فَلَا مَرَدَّ لَهُۥ ۚ وَمَا لَهُم مِّن دُونِهِۦ مِن وَالٍ ﴿١١﴾

பொருள்: எந்த ஒரு சமுதாயத்தவரும், தம் நிலையைத் தாமே மாற்றிக் கொள்ளாத வரையில், அல்லாஹ் அவர்களை நிச்சயமாக மாற்றுவதில்லை; இன்னும் அல்லாஹ் ஒரு சமுதாயத்தாருக்குத் தீயதை நாடினால் அதைத் தடுப்பவர் எவருமில்லை - அவர்களுக்கு அவனைத் தவிர உதவி செய்வோர் வேறு எவருமில்லை. [அத்தியாயம்: அர்-ரஃது, வசனம்: 11].

நம்மை நாம் சுயபரிசோதனை செய்து கொள்ளாத வரை, நமது குறைகளை அறிந்து, அவற்றைச் சரிசெய்து கொள்ளாத வரை நமது சமுதாயத்தின் நிலை மாறாது. பலஹீனமான விஷயங்களை மாற்றி அவற்றின் இடத்தில் உறுதியான விஷயங்களை அமைத்துக் கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும். நமது கல்வியறிவையும் புரிந்துணர்வையும் அதிகரித்துக் கொள்ள வேண்டும்; நம்மில் நன்னடத்தைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; நன்மைகள் செய்யும் கலாச்சாரத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பின்வரும் சிறப்பியல்புகளில் நாம் அனைவரும் இணைந்து சிந்தனை செய்வோமாக!

**முதலாவதாக, ஆழமான கல்வியறிவும் மார்க்கத்தைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளும் கலாச்சாரமும்**

இஸ்லாமிய நாகரீகமானது, கல்வியறிவின் உறுதியான அஸ்திவாரத்தின் மீது அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைக்கப்படுவதற்கு நீண்ட காலமானது. சிந்தனைகளின் அர்ப்பணிப்பு, காலம் மற்றும் ஆற்றல்களின் தியாகங்கள் ஆகியவற்றின் மீது அது அமைக்கப்பட்டது. அதன் காரணமாக, கல்விக் கலாச்சாரமும் கல்வியைப் பரப்பும் கலாச்சாரமும் முன்னேற்ற மடைந்தன. எனவே, கல்வியைத் தேடுவதிலும் கல்வியின் முன்னேற்றத்திற்காகப் பங்களிப்புகள் செய்வதிலும் முஸ்லிம் சமுதாயம் ஆர்வமிக்கவர்களாக இருக்க வேண்டும். இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களுக்கு அருளப்பட்ட திருக்குர்ஆனின் முதல் வசனமாகிறது, கல்வியைக் கற்குமாறு மனிதகுலத்துக்குக் கட்டளையிடுகிறது. திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

"[இறைத்தூதரே!] யாவற்றையும் படைத்த உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக!" [அத்தியாயம்: அல்-அலக், வசனம்: 1].

அவ்வாறே, திருக்குர்ஆனின் "அத்-தவ்பா" எனும் அத்தியாயத்தின் 122-வது வசனத்தில், ஒரு நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பது அவசியம் தான்; ஆனால் அதற்காக அறிஞர்களையும் சமுதாயத்தில் கல்வியறிவின் முன்னேற்றத்தையும் புறக்கணிப்பது கூடாது என அல்லாஹ் வலியுறுத்திக் கூறுகிறான். காரணம், கல்வியறிவுதான் ஆற்றல்களை வழங்குவதாகும். நாட்டின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் நீண்ட காலமாகப் பாதுகாப்பதற்கு கல்வியறிவு அவசியமாகும்.

கல்வியறிவைப் பெற வேண்டும் என்பதன் பொருள், சன்மார்க்கத்தை ஆய்வு செய்து, அதனை நமது வாழ்க்கையில் செயல்படுத்துவதையும் குறிக்கும்.

இன்று ஊடகங்களில் வெளியிடப்படும் மார்க்கம் சம்பந்தமான துணுக்குச் செய்திகளால் நாம் திசை திருப்பப்படுகிறோம். அதன் காரணமாக, மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொள்வதற்கான வழிமுறை எது என்பதில் நமக்குக் குழப்பம் ஏற்பட்டு விடுகிறது. சிறந்த உபதேசங்கள் எந்த மூலங்களில், வழிகளில் நமக்குக் கிடைத்தாலும் அவற்றைக் கேட்பதில் தவறில்லை என்பது உண்மைதான்; எனினும், ஆதாரப்பூர்வமான மார்க்கக் கல்வியறிவைப் பெறுவதில் தொடர்ந்து நாம் ஆர்வத்துடன் காணப்பட வேண்டும். அந்நிலையில், நமக்குக் குழப்பமோ, மார்க்கத்தை அறிந்து அதனைச் செயல்படுத்துவதில் தீவிரவாதப் போக்கோ நம்மிடம் ஏற்படாது.

எனவே, அல்லாஹ் நமக்கு அருளியுள்ள பயனுள்ள கல்வியறிவை நாம் அறிவதும், சமுதாயத்துக்குப் பயனுள்ள பங்களிப்புகளைச் செய்யத் தூண்டுகின்ற கல்வியறிவையும் வாழ்க்கைத் திறன்களையும் நாம் பெற்றுத் திகழ்வதும் அவசியமாகும்.

**இரண்டாவதாக, நன்னடத்தைகளையும் உன்னதமானக் குணத்தையும் பெற்றுத் திகழ்வது.**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள், ”மாகாரிமுல் அஃலாக்” என அரபியில் கூறப்படும் நன்னடத்தையைப் பரிபூரணமாக்கவே அனுப்பப்பட்டார்கள். நன்னடத்தைகளும் உன்னதமான குணநலப் பண்புகளும் தேசியம், மதம், மற்றும் பின்னணிகளைக் கடந்து, மனிதகுலம் மற்றும் நாகரீகத்தின் வளர்ச்சியோடு நெருக்கமானத் தொடர்புடையவையாகும். மரியாதை செய்வதும், நன்னடத்தையும் ஒருவர் மற்றவரை மதித்து நடப்பதன் உணர்வை ஏற்படுத்துபவையாகும். இவ்விதமான மனப்பான்மை தற்காலத்தில் மிகவும் அவசியமாக உள்ளது. காரணம், தற்காலத்தில் தனது கருத்துக்கு எதிரானக் கருத்து கொண்டிருப்பவர்களைத் துன்புறுத்துவதும் அவர்களை ஒடுக்க முயற்சிப்பதும் அதிகரித்துள்ளது. இவ்விதமான மனப்பான்மை இழிவானதாகும்; துரதிருஷ்டமாக, இம்மனப்பான்மை சமுதாயத்தில் பரவலாகி வருகிறது.

நினைவில் கொள்ளுங்கள்! நாம் ஓரிறை நம்பிக்கையாளர்கள் எனும் ரீதியில், இவ்விதமானத் தீய மனப்பான்மை நம்மிடம் காணப்படுவது கூடாது. மாறாக, நம்மைச் சுற்றியுள்ள மக்களைக் கவனத்தில் கொண்டு, அவர்கள் விஷயத்தில் அக்கறை செலுத்த வேண்டும். அனைவருக்கும் கிருபை மற்றும் கருணைச் சிந்தனையை வெளிப்படுத்த வேண்டும். நன்னடத்தை மற்றும் உன்னதமானக் குணத்தைப் பெற்றுத் திகழ்வதானது, கஷ்டமானக் காலங்களை மதிநுட்பம், ஞானம் மற்றும் புரிந்துணர்வுடன் கடந்து செல்வதற்கான ஆற்றலையும் நமக்கு வழங்கும். இமாம் ஷாஃபிஈ [ரஹ்] அவர்கள் தனது கவிதையில் பின்வருமாறு கூறுகிறார்கள்:

وَلَا تَجْزَعْ لِحَادِثَةِ اللَّيَالِي ... فَمَا لِحَوَادِثِ الدُّنيَا بَقَاءُ

وَكُن رَجُلاً عَلَى الأَهْوَالِ جَلَداً ... وَشِيمَتُكَ السَّمَاحَةُ وَالوَفَاءُ

பொருள்: “உனக்கு ஏற்படுகின்ற துன்பங்களைக் கண்டு நீ கவலை கொள்ள வேண்டாம்; காரணம், துன்பத்தை ஏற்படுத்தும் அந்நிகழ்ச்சிகள் தொடர்ந்து இருப்பவையல்ல; கஷ்டமான காலங்களைத் தைரியமாக எதிர்கொள்ளும் நபர்களில் ஒருவராக நீங்கள் இருப்பீர்களாக! மேலும் எவர்கள் பொறுமை மற்றும் நிலைத்து நிற்கும் மனப்பான்மையைப் பெற்றுள்ளார்களோ அவர்களில் ஒருவராகவும் இருப்பீர்களாக!”

**மூன்றாவதாக, மற்றவர்களுக்குக் கொடுக்கும் கலாச்சாரம் மற்றும் நன்மையின் பிறப்பிடமாக இருப்பது.**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

”ஓரிறை நம்பிக்கையாளராகிய முஃமினுக்கு உதாரணமாகிறது பேரித்தம் பழ மரமாகும். அம்மரத்தின் அனைத்து பகுதிகளும் உனக்குப் பயனுள்ளதாக இருக்கும்” [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் இப்னு ஹிப்பான் ரஹ்].

எனவே, ஒரு முஸ்லிம், மற்றவர்களுக்குப் பாதுகாப்பையும் பலன்களையும் வழங்கும் மரத்தைப் போன்று இருக்க வேண்டும். அகிலத்தார் அனைவருக்கும் பயனுள்ள பங்களிப்புக்களைச் செய்ய வேண்டும். திடமான நம்பிக்கை, சகிப்புத் தன்மை மற்றும் உறுதியான நிலை ஆகியவை முஸ்லிமின் சிறப்பியல்புகளாகும்.

அல்ஹம்துலில்லாஹ் [எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!] சர்வதேச அளவில் மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற உணர்வுகள் நம்முடைய சமுதாய மக்களிடம் காணப்படுவதை நினைத்து நாம் பெருமை கொள்கிறோம்; பாலஸ்தீன காஸா மக்களுக்கு RLAF எனும் அமைப்பின் மூலம் நாம் அனைவரும் இணைந்து மனிதாபிமான உதவிகளைச் செய்தோம். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதானது, தேவையுள்ள மக்களுக்கும் உதவியாக உள்ளது. உதாரணமாக, புலம் பெயர்ந்து தொழில்களைச் செய்யும் வெளிநாட்டுத் தொழிலாளிகளும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் மற்ற சீரிய முயற்சிகளுக்கும் பங்களிப்புகளைச் செய்து வருகிறார்கள்.

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ .

**சகோதர, சகோதரிகளே!**

கருணைச் சிந்தனையானது, நாம் செய்யும் அனைத்து நற்காரியங்களிலும் பின்னிப் பிணைந்ததாக உள்ளது. நாம் கொடுக்கும் தர்மம், இஃப்தார் மற்றும் ஸஹர் நேரங்களில் உணவுகள் பகிர்ந்து கொள்ளப்படுவது, பரிமாறிக் கொள்ளப்படும் புன்னகைகள், புன்சிரிப்புகள், நாம் வணக்கம் செலுத்தும் பொது, பொதுப் பாதுகாப்பை உறுதி செய்வது ஆகிய அனைத்தும் நமது உள்ளங்களிலிருந்து வெளிப்படும் கருணைச் சிந்தனைகளாகும்.

இவையெல்லாம், நமது ஷரீஅத்தின் உயிரோட்டமாகும்; நமது மார்க்க வாழ்க்கையை அமைப்பவையாகும். இங்கு நாம், இமாம் இப்னுல் கய்யூம் [ரஹ்] அவர்களின் பின்வரும் அறிவுப்பூர்வமான வார்த்தைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்:

"எவ்விஷயங்களெல்லாம், நீதத்திலிருந்து அநீதத்தின் பக்கமும், கருணைச் சிந்தனையிலிருந்து அதற்கு எதிர்மறையான விஷயத்தின் பக்கமும், நன்மை செய்வதிலிருந்து தீமை செய்வதின் பக்கமும், பயனுள்ள ஞானத்திலிருந்து பயனற்ற விஷயத்தின் பாலும் நம்மைத் திசை திருப்புபவையாக உள்ளனவோ அவை ஷரீஅத்தைச் சேர்ந்தவையல்ல"

நேற்றைய தினத்தின் சோதனைகள் முடிந்து விட்டன என்பதை நாம் அறிவோம்; எனினும், நாளைய தினத்தின் சோதனைகள் தொடர்ந்து வந்துக் கொண்டிருக்கும்; அவை இன்னும் சிக்கலானவையாக இருக்கலாம். எனினும், நாம் நம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் நமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கிடையே நல்ல வாய்ப்புகளை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக, தமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வதில் இரண்டு முக்கிய சிறப்பம்சங்களைப் பெற்றுத் திகழ்ந்த அல்லாஹ்வின் நேசத்திற்குரிய அடியார்களின் உயிரோட்டத்தை நாம் ஆர்வத்துடன் பின்பற்ற வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "யூனுஸ்" எனும் அத்தியாயத்தின் 62-வது வசனத்தில் கூறுகிறான்:

أَلَآ إِنَّ أَوْلِيَآءَ ٱللَّهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ﴿٦٢﴾

பொருள்: "[முஃமின்களே] அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்."

தற்போது ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனத்தின் பொருளை திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் பின்வருமாறு சுருக்கமாகக் கூறுகிறார்கள்:

”அல்லாஹ்வின் நேசத்திற்குரிய அடியார்கள் நாளைக்கு ஏற்படும் சோதனைகளைப் பற்றி - அவை எவ்வளவு பெரிய சோதனைகளாக இருந்தாலும் - கவலைப்படமாட்டார்கள். அச்சோதனைகளுக்கிடையே அவர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை பரிபூரண நம்பிக்கையுடன் தொடர்வார்கள். அவர்கள் நேற்றைய தினத்தில் என்னென்ன சோதனைகளை எதிர்கொண்டார்களோ அவற்றை நினைத்தும் கவலைப்படமாட்டார்கள். அச்சோதனைகள் அவர்களிடம் கடுமையானக் காயங்களை விட்டுச் சென்றிருந்த போதிலும் அவர்கள் அவை பற்றிக் கவலைப்பட மாட்டார்கள்”.

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ .

**சகோதர, சகோதரிகளே!**

சமீபத்தில் முடிவுற்ற ரமதானாகிறது, நமது ஆன்மீகத்துக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கலாம் என நம்புகிறோம்; எனவே, சற்று முன் ஓதப்பட்ட வசனத்தில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் நாம் அல்லாஹ்வின் நேசத்திற்குரிய அடியார்களாக ஆகலாம். நாம் தொடர்ந்து நமது ஓரிறை நம்பிக்கையைப் பலப்படுத்திக் கொள்வோமாக! நம்மில் அறிவு ஞானத்தை ஏற்படுத்திக் கொள்வோமாக! அதன் மூலம் வல்லமை மிக்க அல்லாஹ்வின் கிருபையைப் பெற்றவர்களாக நாம் ஆகலாம். நாம் இன்று பெறுகின்ற வெற்றிகள், இப்பூமியில் வாழும் மனிதகுலம் அனைவருக்கும் தீர்மானமான, உறுதியான வெற்றிகளாக அமையட்டுமாக!

**யா அல்லாஹ்! யா ஃபத்தாஹ்! யா ஆலிம்!**

நாங்கள் உன்னிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்; எங்களின் விரும்பங்களை எங்களுக்கு நிறைவேற்றித் தருவாயாக! உன்னிடம் கேட்கின்றோம்; எங்களுக்குத் தருவாயாக! நாங்கள் பாவங்களைச் செய்துள்ளோம்; எங்களை மன்னிப்பாயாக! உன்னிடமே நாங்கள் முறையிடுகிறோம்; நீ தான் எங்களுக்கு உதவி செய்பவன்.

**யா அல்லாஹ்! யா அஃபுவ்வுன்! யா கஃபூர்!**

நீ எங்களின் நிலைகளை நன்கு அறிந்தவனாக இருக்கின்றாய்; எங்களின் வேண்டுதல்களைப் பரிபூரணமாக அறிபவனாக இருக்கின்றாய்; எங்களின் குற்றங் குறைகளைச் சரிசெய்து கொள்வதற்காக எங்களுக்கு அருள் புரிவாயாக! புனிதமிக்க இக்காலைப் பொழுதில், பரிசுத்தத் தன்மையையும், வெற்றியையும் அடைந்துள்ள உனது நல்லடியார்களில் ஒருவராகவும், நற்காரியங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடியார்களில் ஒருவராகவும் எங்களை ஆக்குவாயாக!

**யா அல்லாஹ்! யா கவிய்யு! யா மதீன்!**

கஷ்டத்திலும் கவலையிலும் உள்ள எங்கள் சகோதரர்களுக்கு மீண்டும் பாதுகாப்பை வழங்குவாயாக! சவால்களை சகிப்புத்தன்மையுடன் எதிர்கொள்வதற்கு எங்கள் உள்ளங்களிலும் அவர்களின் உள்ளங்களிலும் அமைதியையும் நிலைத்தன்மையையும் ஏற்படுத்துவாயாக! எங்களுக்கும் அவர்களுக்கும் அமைதியையும் நலன்களையும் வழங்குவாயாக! கஷ்டங்கள் மற்றும் துன்பங்களின் பிடியிலிருந்து எங்களையும் அவர்களையும் விடுதலை செய்வாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ، اَللهُ أَكْبَرُ ،
اَللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ .

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَ أَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَ لَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم**

## இரண்டாவது பிரசங்கம்

**اللهُ أَكبَر X 7**

**الْحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.**

**أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ الْعَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ بَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.**

**وَارْضَ اللَّهُمَّ عَنِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.**

**اللَّهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ، وَالْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ، الْأَحْيَاءِ مِنهُم وَالْأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا الْبَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالْمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ الْبُلْدَانِ عَامَّةً، يَارَبَّ الْعَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ**

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ، وَإِيتَاءِ ذِي الْقُرْبَى وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالْبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.